Judicial Form No.60

CALENDAR AND JUDGMENT

(For use in cases whether there are more accused persons than one)

District of Tenkasi

Calendar of cases tried by the Judicial Magistrate of Tenkasi.

| Date of offence | Date of Report of complaint | Remand or surrender of accused | Release on bail | Commencement of trial | close of trial | Sentence of order |
|---|---|---|---|---|---|---|
| 21.05.2017 | 01.06.17 | 02.06.2017 | 07.06.2017 | 16.03.26 | 09.06.26 | 23.06.26 |
| C.S.D. 18.12.17 | Explanation of Delay and Remarks: NIL | | | | | |
| C.S.F.D.30.11.22 | | | | | | |
| D.Cogni.30.11.22 | | | | | | |
| A.P.D. 16.03.26 | | | | | | |

Judgment in CC 557/2022 on the file of the Judicial Magistrate of Tenkasi.

Complainant: The Sub Inspector of Police, Sendamaram P.S in Cr.No.101/2017

| Name of the Accused | Age | Fathers/Husband's Name |
|---|---|---|
| Shanmugaraja | 1976 | Puthiyan |

| Caste or Religion | Calling | Residence | Police Station |
|---|---|---|---|
| Hindu | Coolie | Kammapachery | Sendamaram |

**Offence** : Section 323, 448, 506(1) IPC, Sec.4 of TNPHW Act

**Sentence** : Accused is found not guilty Sec.323, 448, 352(2counts), 506(1) IPC, Sec.4 of TNPHW Act and the accused are acquitted Sec.248(1) of Crpc.,

MUTHU LAKSHMI

Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.06.25 11:53:55 +0530

Judicial Magistrate,

Tenkasi.

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை: திருமதி.எஸ்.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026 ம் வருடம் ஜுன் திங்கள் 23 ம் நாள் செவ்வாய்க்கிழமை
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 557/2022
CNR.No.TNTS02-003073-2022

அரசுக்காக – காவல் உதவி ஆய்வாளர்,
சேர்ந்தமரம் கா.நி.கு.எண் 101/2017 ... குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

சண்முகராஜா, 1976,
த.பெ.புதியன்,
எண்.5/264, பள்ளிக்கூடத் தெரு,
கண்மணியாபுரம்,
கம்மாபச்சேரி,
புதுக்குடி போஸ்ட் ... எதிரி

இவ்வழக்கு 30.11.2022 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியான விசாரணைக்காக இன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் வரப்பெற்று முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 தென்காசி அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.மாரியப்பன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும் கேட்டு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

## தீர்ப்புரை

**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு –**

இவ்வழக்கின் சாட்சி சுமதி கடந்த 21.05.2017 ம் தேதி இரவு 08.30 மணிக்கு அவரது வீட்டினுள் இருந்தபோது எதிரி வீட்டினுள் அத்துமீறி நுழைந்து சாட்சி சுமதியை பெண் என்று பாராமல் சட்டையை பிடித்து இழுத்தும் சாட்சி சுமதியின் சத்தம் கேட்டு வந்த மகேஸ்வரியை காதில் ஓங்கி அடித்தும், மகேஸ்வரியின் கணவர் மற்றும் தந்தை அடைக்கலமுத்துவை அடித்து உயிர்நிலையில் மிதிப்பது போல் வந்து மிரட்டிச் சென்றதாகவும், எனவே, எதிரி இதச பிரிவுகள் 323, 448, 506(1) உடனிணைந்த தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4 ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக எதிரி மீது சேர்ந்தமரம் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரி இந்நீதிமன்றத்திலிருந்து பிரிவு 204 கு.வி.மு.ச.வின் கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207 ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. ஆலோசனை செய்ய அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் எதிரியிடம் குற்றம் குறித்து வினவியபோது அவர் குற்றத்தினை மறுத்துள்ளார். இரு தரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்த பின்னர் இந்நீதிமன்றம் பிரிவு 240(1) கு.வி.மு.ச.வின் படி எதிரி மீது இதச பிரிவுகள் 448, 323, 352(2 எண்ணிக்கை), 506(1) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4 ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து கு.வி.மு.ச. பிரிவு 240(2)ன் கீழ் அதனை விளக்கி வினவியபோது அவர் தான் குற்றவாளி இல்லை என்று மறுத்துரைத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

4. இந்த வழக்கில், எதிரிக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் 5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 6 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. சான்றுப்பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு –**

கடந்த 22.05.2017 ம் தேதி 10.30 மணிக்கு உதவி ஆய்வாளர் சண்முக நயினார் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது சுமதி என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.101/2017, இதச பிரிவுகள் 323, 448, 506(1) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4 ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளதாகவும், அந்த புகார் மனு அ.சா.ஆ.2 மற்றும் முதல் தகவலறிக்கை அ.சா.ஆ.3 என்றும், பின்னர் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட விசாரணை அதிகாரி 02.06.2017 ம் தேதி 07.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் குருசாமி மற்றும் பால் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறத்தையும் பார்வையிட்டு பார்வை மகஜர் அ.சா.ஆ.4, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 தயார் செய்துள்ளதாகவும், பின்னர் சம்பவ சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில், 02.06.2017 ம் தேதி கண்மணியாபுரத்தில் வைத்து கைது செய்து தக்கவழிக்காவல் மூலம் நீதிமன்ற

காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், பின்பு காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் இந்திரா என்பவரை விசாரித்து காயச்சான்று அ.சா.ஆ.6 பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், பின்பு புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

6. அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடிவுற்றவுடன் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் எதிரிக்கு எதிரான சங்கதிகளை எதிரியிடம் கூறி அது சம்பந்தப்பட்ட பகுதிகளை விளக்கி கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய போது எதிரி பொய்ச்சாட்சி என்று கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா ? என்று வினவிய போது, எதிரி சாட்சிகள் இல்லை என்று கூறினார். எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. பின்னிட்டு இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டன. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள், இரு தரப்பு வாதுரைகள் ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீது இதச பிரிவுகள் 448, 323, 352(2 எண்ணிக்கை), 506(1) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4 ன் கீழ் உள்ள குற்றச்சாட்டானது அரசு தரப்பால் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிருபணம் செய்யப்பட்டுள்ளதா ? என்பதேயாகும்.

<u>8. அரசு தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்</u> –

எதிரி, அ.சா.1யை அசிங்கமாக பேசி, அடித்துக் காயப்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், மேற்படி குற்றச்சாட்டானது அ.சா.1 முதல் அ.சா.5 வரையுள்ள சாட்சிகளின் மூலமும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

<u>9. எதிரி தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்</u> –

அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், அப்படி ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றும்,

எனவே, புலன் விசாரணை அதிகாரி சம்பவயிடம் சென்று முறையான புலன் விசாரணை செய்யாமலேயே எதிரிக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே, எதிரிக்கு எதிரானக் குற்றங்கள் எவ்வகையிலும் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

<u>10. தீர்வு</u> –

இவ்வழக்கின் சாட்சி சுமதி கடந்த 21.05.2017ம் தேதி இரவு 08.30 மணிக்கு அவரது வீட்டினுள் இருந்தபோது எதிரி வீட்டினுள் அத்துமீறி நுழைந்து சாட்சி சுமதியை பெண் என்று பாராமல் சட்டையை பிடித்து இழுத்தும் சாட்சி சுமதியின் சத்தம் கேட்டு வந்த மகேஸ்வரியை காதில் ஓங்கி அடித்தும், மகேஸ்வரியின் கணவர் மற்றும் தந்தை அடைக்கலமுத்துவை அடித்து உயிர்நிலையில் மிதிப்பது போல் வந்து மிரட்டிச் சென்றதாகவும், எனவே, போலிசாரிடம் நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்ததாகவும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

11. எதிரியின் மீதான குற்றச்சாட்டானது அரசு தரப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்று பார்க்கும் போது, புகார்தாரரான அ.சா.1 சுமதி, தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், தன் உறவினர் என்றும், சாட்சிகள் மகேஷ்வரி, சங்கரலிங்கம் ஆகியோர்களை தெரியும் என்றும், தான் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டதாகவும், கடந்த 9 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிக்கும் தனக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டதாகவும், தங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சனையை ஊர் பெரியவர்கள் முன்பு பேசி தீர்த்துக் கொண்டதாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 தன்னுடையதுதான் என்றும், புகார் மனுவில் என்ன எழுதியிருக்கிறது என்று தனக்கு தெரியாது என்றும், எதிரி தன்னை அசிங்கமாக பேசவில்லை, கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றும், தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்று சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளதாகவும், வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.2 மகேஷ்வரி, தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், தன் ஊர்க்காரர் என்றும், அ.சா.1 சுமதி தன் பெரியப்பா மகள் என்றும், சாட்சி சங்கரலிங்கம் தன் பெரியப்பா என்றும், தான் எதிரியுடன் சமாதானமாக

சென்றுவிட்டதாகவும், கடந்த 9 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிக்கும் தனக்கும் பிரச்சனை ஏற்பட்டதாகவும், தான் தடுமாறி கீழே விழுந்ததில் தனக்கு காயம் ஏற்பட்டதாகவும், தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்று சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளதாகவும், வழக்கை மேல் நடத்த விருப்பமில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

13. அ.சா.3 சங்கரலிங்கம், தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், தன் உறவினர் என்றும், அ.சா.1 சுமதி, அ.சா.2 மகேஷ்வரி ஆகியோர்களை தெரியும் என்றும், வழக்கு சம்பவம் பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

14. அ.சா.4 அடைக்கலமுத்து, தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், தன் உறவினர் என்றும், அ.சா.1 சுமதி, அ.சா.2 மகேஷ்வரி, அ.சா.3 சங்கரலிங்கம் ஆகியோர்களை தெரியும் என்றும், வழக்கு சம்பவம் பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்கண்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை வைத்துப் பார்க்கும் போது, எதிரி, புகார்தாரரை அசிங்கமாக பேசி, அடித்துக் காயப்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்ததாக முன்னிலைப்படுத்தப்பட்ட அரசு தரப்பு வழக்கு வெகுவாக பாதிக்கிறது. மேற்படி அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட போதிலும் அரசு தரப்புக்கு ஆதரவாக எந்த சாட்சியமும் அளிக்கவில்லை.

15. இந்த வழக்கில், அ.சா.5 தனது சாட்சியத்தில், அ.சா.1 னிடம் புகார் மனு பெறப்பட்டு, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, புலன் விசாரணை முடித்து குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது ஆகியவற்றை குறித்து சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் இருப்பதால் அ.சா.5 ன் சாட்சியத்தை மட்டுமே வைத்து எதிரி குற்ற செயல்களில் ஈடுபட்டார் என்றோ அல்லது எதிரிக்கு எதிரான அசிங்கமாக பேசி, அடித்துக் காயப்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று முடிவுக்கு வர முடியாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16. மேற்சொன்ன விவாதம் காரணங்கள் மற்றும் பரிசீலனையை பார்க்கும் போது அரசு தரப்பில் எதிரி மீது இதச பிரிவுகள் 448, 323, 352(2 எண்ணிக்கை), 506(1) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4ன் கீழ் உள்ள குற்றச்சாட்டு தகுநிலை ஐயப்பாட்டுக்கு அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரி குற்றவாளி இல்லை என்று கண்டறிகிறது.

17. முடிவில், எதிரி இதச பிரிவுகள் 448, 323, 352(2 எண்ணிக்கை), 506(1) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

18. இவ்வழக்கின் எதிரி கடந்த 02.06.2017 அன்று கைது செய்யப்பட்டு, கடந்த 07.06.2017ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார்.

<u>19. வழக்குச் சொத்து</u> –

இந்த வழக்கில் சொத்துக்கள் தாக்கல் இல்லை.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026ம் வருடம் ஜூன் திங்கள் 23ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

MUTHU LAKSHMI

Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.06.25 11:54:06 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.

**அரசு தரப்பு சாட்சிகள் –**

| | |
|---|---|
| அ.சா.1 | சுமதி |
| அ.சா.2 | மகேஷ்வரி |
| அ.சா.3 | சங்கரலிங்கம் |
| அ.சா.4 | அடைக்கலமுத்து |
| அ.சா.5 | திரு.அந்தோணி ஜெயராஜ், உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் –**

Judicial Form No.68

| SL. No | Description to the exhibit and its date | Date, when the exhibit was filed in the case | How marked | By whom filed | remarks |
|---|---|---|---|---|---|
| 1 | புகார் மனுவிலுள்ள அ.சா.1 ன் கையொப்பம் | 26.05.2026 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2 | புகார் மனு | 09.06.2026 | அ.சா.ஆ.2 | அ.சா.5 | அசல் |
| 3 | முதல் தகவல் அறிக்கை | 09.06.2026 | அ.சா.ஆ.3 | அ.சா.5 | அசல் |
| 4 | பார்வை மகஜர் | 09.06.2026 | அ.சா.ஆ.4 | அ.சா.5 | அசல் |
| 5 | மாதிரி வரைபடம் | 09.06.2026 | அ.சா.ஆ.5 | அ.சா.5 | அசல் |
| 6 | காயச்சான்று | 09.06.2026 | அ.சா.ஆ.6 | அ.சா.5 | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள் –** இல்லை.

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருள் –** இல்லை.

MUTHU LAKSHMI
Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.06.25 11:54:10 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.

<u>**குறிப்பு :–**</u>

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்.
2. தீர்ப்பு குறித்து காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.
3. அரசு வழக்கறிஞருக்கு தீர்ப்பு நகல் வழங்கப்பட்டது.
4. சாட்சிகளை மூன்று நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.